
காஞ்சி

# நாடு



## தேய்பிறை

கவிஞர். நா. முத்துகுமார்

பௌர்ணமி.......
வந்துபோனபின்........
சிலநாள் கழித்து........
தூக்கம் வராததால்........
வானத்து நிலவை
பார்த்துக் கொண்டிருந்தேன்!
அடடா
எங்கள் தலைவர்கள்
எப்போது அங்கு சென்றார்கள்?
சுரண்டப்பட்டுள்ளதே!

10 ஜுன் 1994
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

JL
N94.3.62
217220.

சிறப்பாசிரியர்:
டாக்டர். சி.என்.ஏ.பரிமளம்.

'காஞ்சி நாடு' வளர்ச்சிக்கு விளம்பரம் கொடுத்து ரூ. 1000/- நன்கொடை கொடுத்து உதவியர்களுக்கு நன்றி.

திரு. இராதாகிருட்டினன் M, A.
கூடுதல் இயக்குனர் குடும்ப நலம் — தமிழக அரசு.

திரு நல்லரசு M. A,
துணை இயக்குநர்
செய்தி மற்றும் விளம்பரம் — தமிழக அரசு.

★ ★ ★

'காஞ்சி நாடு' வாழ்நாள் உறுப்பினர்களாக இந்தத் திங்கள் இணைத்துக் கொண்டவர்கள்.

திரு. குகன், திரு கதிர்வேல், திரு. V. C. குகநாதன் — இயக்குநர்.

★ ★ ★

காஞ்சி நாடு திங்கள் இதழ் :—

தனி இதழ் ரூ. 3/-

ஆண்டு கட்டணம் ரூ. 35/-

வாணாள் கட்டணம் ரூ. 350/-

---

## 'காஞ்சி நாடு' விளம்பர கட்டணம்

| | |
|---|---|
| அரை பக்கம் உள்ளே | ரூ. 250/- |
| முழுப்பக்கம் உள்ளே | ரூ. 500/- |
| அட்டை 2, 3-ம் பக்கம் | ரூ. 750/- |
| அட்டை 4ம் பக்கம் | ரூ. 1000/- |

---

'காஞ்சி நாடு' திங்கள் இதழ் வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஒவ்வொரு திங்களும் 10 இதழ்களை வாங்கி வளர்ச்சிக்கு நிதி அனுப்பிவிட்டு. இதழ்களை நண்பர்களுக்கு இனாமாக வழங்கி வரும் நல்ல உள்ளங்கள்

திரு. வேம்பையயன் கல்பாக்கம்
திரு. அன்பு நிலவன் திருக்கோவிலூர்
திரு. வெ. பிரகாசு காரியாபட்டி
திரு. A. K. மூர்த்தி எம். ஏ. பி. டி. தஞ்சாவூர்
திரு. சீதர் வேட்டை வலம்

ஆகியோருக்கு நன்றி

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 217220. 600 008

# காஞ்சி நாடு

மலர் — 3 7—6 94 இதழ் — 6

திருவள்ளுவர் ஆண்டு 2025 விடை (வைகாசி)

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் திங்கள் இதழ்


## இடைத் தேர்தல்

தமிழகத்தில் இரண்டு தொகுதிகளில் இடைத்தேர்தல் நடந்து முடிந்து மக்கள தீர்ப்பு வெளியாகியிருக்கிறது. இரண்டு தொகுதிகளிலும் ஆளுங்கட்சி வெற்றி பெறுவது என்பது புதிதல்ல. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது இதற்குப் பொருந் தாது. ஆளுங்கட்சிக்கு பணம், அதிகார பலம் இரண்டும் பெருமளவு உதவியிருக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. இரண்டாவது இடத்தை பிடித்தவர்கள் வனருகிறார்கள், மக்கள் நம்பிக்கையை பெற்றவர்கள் அடுத்த தேர்தலில் அவர்களுக்கு நல்ல வாய்ப்பு இருக் கிறது என்று ஓர் கணிப்பு உருவாகுவதற்கு எதிர்மாறாக ஓர் தொகுதி யில் ம. தி. மு க. வும், மற்றொரு தொகுதியில் தி. மு க. வும் வந்திருப் பது மக்களின் அறிவு கூர்மைக்குச் ஓர் சான்று. கிராமங்கள் நிறைந்த பகுதியில் ம.தி.மு.க வுக்கு அதிக வாக்குகளும் நகர்புறத்தில் தி.மு.க.வுக் அதிக வாக்குகளும் கிடைத்திருப்பது நம்மை சிந்திக்க வைக்கிறது. அண்ணா வழியில் ம. தி மு க,வின் பயணம் இருக்கும் சொல்லிவிட்டு ம.தி.மு.க. வேட்பாளர் கருமாரியம்மன் கோவிலுக்கு சென்றுவிட்டு வேட்பாளர் பத்திரத்தை தாக்கல் செய்ததும், ம.தி.மு.க, வின் முக்கியப்புள்ளி யொருவர் காஞ்சிபுரம் சென்று கோயில்களுக்கு சென்றுவிட்டு (அண்ணா நினைவகத்துக்குச் செல்லாமல்) சங்கராச் சாரியாரை சந்தித்து ஆசி பெற்றார் என்று செய்தியை பெரியதாக வெளியிட்டு, மயிலை சென்று வாக்கு சேகரப்பில் ஈடுபட்டு அந்த ஓட்டு கள் நமக்குத்தான் என்ற மாயையில் சிக்கியதும் 'அதற்கும் இதற்கும்' முடிச்சு போடாதீர்கள் என்று மக்கள் பாடம் கற்பித்ததையும் சம்பந்தப் பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த தொகுதி மக்கள் இதற்காகப் பாராட்டபட வேண்டியவர் கள் ஜங்கராச்சாரியாரை சந்தித்த இரண்டு நாட்களுக்குப்பிறகு வாக்கு

மனித மேம்பாடே என் இயக்கம்!

தோழமையே என் மேடை!

— அறிஞர் அண்ணா

JL
M2112
N94.3

சேகரிக்க சென்ற இடத்தில் ஓர் சாஸ்திரிகள் கே பி கே வரவில்லையா எனக்கேட்டார் என்றோர் செய்தியை வெளியிட்டும் தங்களுக்கு அந்த வாக்குகள் வரவில்லையே என எண்ணி ஏமாந்தவர்களுக்கு ஒரு சொல் திராவிட இயக்கம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு நீங்கள் எப்பாடு பட்டாலும் அந்த வாக்குகள் உங்களுக்கு வராது. இனிமேலும் அந்தத்தவறைச் செய்யாதீர்கள், மற்றவர்கள் செய்தார்கள் என நீங்கள் குறை கூறியது பொருள் இல்லாமல் போனது, தேர்தல் நெருக்கத்தில் ம தி மு க எம் ஜி ஆர் அவர்களின் படத்தைப்போட்டு விளம்பரம் செய்தது எந்த வகையில் நியாயம் என்ற, கொள்கை வழியில் உங்களை பின்பற்ற நினைத்த இளைஞர்கள் உள்ளத்தில் எழுந்த பெரிய கேள்விக்குறி. இந்த தேர்தல் முடிவுகள் ஒன்றை தெளிவாக விளக்கியிருந்தது, அது. 1967- ல் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தில் காங்கிரசின் எதிர்காலத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள், அதே நிலமைதான் இன்றும் திராவிட இயக்கங்கள் மாறி, மாறி காங்கிரசை தோளில் தூக்கி வைத்துக் கொண்டு உயிர் கொடுக்க முனைவது அண்ணா வழியுமல்ல ; அதை தமிழக மக்கள் விரும்பவுமில்லை என்பதை தெளிவாக்கியிருக்கிறார்கள், இனியாவது இவர்கள் இந்தத் தவறைச் செய்ய வேண்டாமென்று பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் சார்பில் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம், திராவிட இயக்கங்கள் இவ்வளவு பிளவுபட்டு நிற்கும் போதும், காங்கிரஸ் இயக்கம் 'டெபாசிட்' இழந்து நிற்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் காலத்து 'ஓட்டு வங்கி' அப்படியே தான் இருக்கிறது என்கிற உண்மை தெள்ளத் தெளிவாகிறது. 'இனி நம்மை எந்த எதிரியாலும் வீழ்த்த முடியாது; நமக்குள்ளேயே பிளவுபட்டு வீழ்ந்தால் ஒழிய என அன்று அண்ணா அவர்கள் சொன்னது எவ்வளவு தொலை நோக்கோடு சொல்லப்பட்டது என்பது இப்போது நமக்கு புரிகிறது. திராவிட இயக்கங்களுக்கு மற்றொரு வேண்டுகோள், உதட்டளவில் அண்ணாவின் பெயரைச் சொல்லிவிட்டு கொள்கையில் வழுக்காதீர், அண்ணாவின் கொள்கை வழியில் நடவுங்கள், உங்களுக்கு என்றும் வெற்றிதான். தமிழினத்தின் மேம்பாட்டுக்கும், சமுதாய விடுதலைக்கும் பாடு படுங்கள்,

---

# மடல்கள்

இனமான ஆசிரியருக்கு, வணக்கம்,

நான் (சாலமன்) காஞ்சி நாடு திங்கள் இதழை தவறாது படித்து வருகிறேன். தமிழினத்தின் கடந்த கால வரலாற்றை தெளிவாய் அறிந்து கொள்ள துணை புரிகிறது. நன்றி

எனது ஒரே வருத்தம். இதழின் முகவரியில் வரும் ஆங்கிலச் சொல் என்பதே. அதாவது 7. அவன்யு சாலை என்பது. எனது உணர்வுக்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். அவன்யூ என்பதை நிழற் சாலை என அழைக்கலமே. நன்றி வணக்கம்

செ. சாலமன்
''ஔவையகம்''
5. 15 ஆம் நிழற்சாலை,
அணுவாற்றல் நகரியம்
கல்பாக்கம் — 603 102.

உயர் திரு காஞ்சி நாடு ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு வணக்கந்துடன் மேலூரிலிருப்து சி. மணி சேகரன் எழுதுவன, தங்களின் 7-5-94 தேதியிட்ட எப்படி என்ற தலைப்பை படித்தேன். அண்ணன் பெரியய்யா இதனை எனக்குத் தந்தார், எனக்கு உதயமானதை எழுதியுள்ளேன். பிரசுரியுங்கள் என கேட்டுக்கொள்கிறேன்.
(பச்சை நீர் பல்லில் படாத போது வேர்லை நீர் வெளி வருமோ !)

# தண்ணீரே இல்லை

அண்டச் சூடு
மண்டை பிளக்குது
தார் ரோட்டின் தக தகப்பு
தகரமாய் வெடிக்குது
உச்சி வெயில் ரோட்டில்
சாக்கு பாதம் கொண்டு வாலி
உழைத்தாரை ஊற்றும் வேலையுலும்
ஊராத மேனிகள்
எங்கள் மேனிகள்
தண்ணீர்கள் குடித்தாலல்லவா
வேர்வைகள் வெளிக் கிளம்ப
எங்கும் நீரில்லை
என்ன செய்ய

அன்புடன்
சி, மணிசேகரன் M. A.
30-B கோமதியாபுரம்
மேலீர்
மதுரை—625 106

டாக்டர் அம்மா அவர்களுக்கு வணக்கம்

தங்களின் குமுறலின் வெளிப்பாடாகவே இந்த இதழ் தலையங்கம் கண்டேன் ஆமாம் அண்ணா வியாபாரம் நன்றாகத்தான் நடக்கிறது. படிப்பவர்கள் ஆதரிப்போர்கள் இல்லாத நிலைதான் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை முயற்சி செய்கிறேன். இன்னும் சிலரிடம் சொல்லி வருகியேன் முடிந்தவரை என் தொண்டு தொடரும். தங்களின் விடாமுயற்சிக்கு வாழ்த்துக்கள்.

பட்டி செங்குட்டுவன்
55, குட்டைக்காரத் தெரு,
விருத்தாசலம்.

பேரன்பிற்குரிய டாக்டர் சி என் ஏ பரிமளம் அவர்கட்கு வணக்கம்

இந்தக் கிழமை காஞ்சி நாடு இதழில் தாங்கள் தீட்டியிருந்த கடிதம். கருத்து முற்றிலும் உண்மையே. இன்றைக்கு மட்டும் அல்ல, பேரறிஞர் அண்ணா மறைந்த ஒரு வாரத்திலேயே — அத்தக் காரியம் நிறைவேற்றப்பட்டு விட்டது. கோவை — பெரியார் மாவட்டம் ஒன்றாக இருந்தபோது எங்கள் மாவட்டச் செயலாளராக, இருந்த கண்ணன் புளியம்பட்டி PAS அவர்கள் ஒருகுறை வெற்றி உங்கள் வாதம் மெத்தக்ளி. கலைஞர் மட்டுமே கட்சி என்றால் இருங்கள் இல்லையேல் வெளியேறுவது தவிர வேறு வழி இல்லை என்று கூறினார் அவர் உழைக்காத உழைப்பா? கட்சிக்கு கடைசியில் சாதாரண உறுப்பினர் பொறுப்பு கூட இல்லாமல் நீக்கப்பட்டாரே?

அறிவாலயம் அண்ணா பெயரால் எதற்கு வாடகைக்கு விட்டுப் பணம் சேர்க்கவா? அல்லது பேரறிஞர் அண்ணா நூல்கள் — வெளி விட்டு அவர் புகழ் பரப்பவா? முன்னதுதானே மிகச் சிறந்பாக நடைபெறுகிறது பேசிப் பயன் இல்லை,

எனவேதான் என் முதல் மடலிலேயே — அண்ணாவை மறக்காத என்னால் முடிந்தது ரூ 500/- என் அனுப்பி வைத்தேன், என் மகள் திருமண விழா அவர் எழுத்தோவியங்கள் அடங்கிய — நூல் 2000 பிரதிகள் வெளியிட்டேன், இலவசமாக

என்றாலும் — வசதியற்றோர் — இலட்சோப — இலட்சம் தொண்டர்கள் இதயத்தில் அண்ணா இருக்கின்றார் — அண்ணா இருக்கின்றார்.

அன்பன்
கி. வெற்றிவேலு
கோவை

# அறிஞர் அண்ணாவின் தன் வரலாறு (22)

— Dr. சி. என். ஏ. பரிமளம் —

நடு நிசியில்..................சிறுகுடிலில்...

இன்றுபோல் அன்றும் நடுநிசி — நானும் நண்பர்கள் என். வி. நடராசன், மதுரை முத்து ஆகியோரும் அவரைக் காணச் சென்றபோது !

விருதுநகரில், காங்கிரஸ் தியாகி சங்கரலிங்கம் என்பவர் உண்ணா விரதம் இருந்து வருகிறார் என்ற செய்தியைக் கேள்விப் பட்டதிலிருந்தே எனக்கு அவரைக் காணச் செல்ல வேண்டும் என்று அவா. அன்றுதான் முடிந்தது.

அந்தத் திடலில் நான் பலமுறை பேசியிருக்கிறேன். கடை வீதியை ஒட்டி உள்ள மாரியம்மன் கோயில் திடல்.

வீரம் — தியாகம் — வாழ்க்கையை அர்ப்பணிப்பது — எதற்கும் அஞ்சாமல் கடமையைச் செய்வது — இன்னல் எது நேரிடினும் கலங்காமல் இருப்பது என்பன பற்றி, பலர் ஆற்றலுடன் முழக்கமிடு வதற்காக அமைந்துள்ள திடல்

நானும் அங்கு நின்று பேசியிருக்கிறேன்.

அந்தத் திடலில், வீரமும் தியாகமும் ஒருருவாகி, சங்கரலிங்கனார் ஆகிக் காட்சி தரும் என்று யார் எண்ணியிருந்திருக்க முடியும் ? அந்தத் திடலில் ஒரு சிறு ஓலைக்கொத்துக் குடில் அமைத்துக் கொண்டு, ஒரு கயிற்றுக் கட்டிலின் மீது அவர் படுத்துக் கொண்டிருக்கக் கண்டேன். அந்தக் குடிலின் மீது காங்கிரசுக் கொடி பறந்து கொண்டிருந்தது.

நடுநிசி — எனவே அங்கு நான்கைந்து பேர் மட்டுமே இருந்தனர், ஒரு திரை போடப்பட்டு இருந்தது குடில் வாயிலில். அதை நீக்கியபடி உள்ளே சென்று பார்த்தேன்.

கயிற்றுக் கட்டிலின் மீது சுருண்டு படுத்திருந்த உருவம் தெரிந்தது. மங்கலான விளக்கொளியில் எனக்கு அவருடைய முகம்

தெளிவாகத் தெரியவில்லை. சில நொடிகள் உற்றுப் பார்த்த பிறகே தெரிய முடிந்தது.

அமைதி குடி கொண்டிருந்த இடம் நாங்கள், சத்தம் ஏதும் எழலாகாது — அவருக்குச் சங்கடம் ஏற்படும் — என்று எண்ணிக் கொண்டபடி, உடன் வந்த தோழரை 'எழுப்பாதீர் ஐயா' என்று சாடை காட்டினோம். அவரோ தியாகத் திருவுருவைத் தொட்டுத் தட்டினார்.

சங்கரலிங்கனார் கண் திறந்தார். தூக்கம் அல்ல — சோர்வினால் செயலற்றுப் போன நிலை.

"ஐயா, அண்ணாதுரை........................"

— என்றார் அந்த நண்பர்.

ஒரு விநாடி அவர் என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையின் முழுப் பொருளை 'பாவி' நான்; அன்று சரியாக உணர்ந்து கொள்ள முடியவில்லை !

'செத்துக் கொண்டு இருக்கிறேனடா, செயலறியாதவனே !' என்பதல்லவா அந்தப் பார்வையின் பொருள் !

மிகப் பெருங்குணம் வாய்ந்தவர் அந்தப் பெரியவர்.

"அண்ணாதுரை................" என்று அந்த நண்பர் சொன்னதும் என் இரு கரங்களையும் பற்றிக் கொண்டார். அவருடைய முகத்தருகே என் கரங்கள் — கண்ணீர் கரத்தில் தட்டுப்பட்டது ! என் கண்கள் இருண்டு விருவது போன்றதோர் நிலை ஏற்பட்டது !

தலைமாட்டிலே நான் உட்கார, அவர் இடம் செய்து தர — சிறிது நகர்ந்தார் ; நான் அமர்ந்தேன். அவருடைய போர்வை கலைந்தது ; எலும்புக் கூடாகத் தெரிந்தார்.

### பழுத்த பழம் உதிர்த்த மொழிகள்

பழுத்த பழம் ! பேரப் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டு, காலந் தள்ளிக் களித்திட வேண்டிய வயது — உண்ணாவிரதம் மேற்கொண்டு அறுபது நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன !

அவர், உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கான காரணங்களை விளக்கி வெளியிட்ட அறிக்கையையும், அவர் வெளியிட்ட கோரிக்கைகளையும் நான் பார்த்திருக்கிறேன்.

அவற்றிலே ஒன்று கூட சொந்த நலன் பற்றியது என்று சுட்டிக் காட்ட, சூழ்ச்சித் திறன் மிக்கோரால் கூட முடியாது. நாடே கேட்கும் கோரிக்கைகள்; நல்லோர் எவரும் மறுக்க முடியாத கோரிக்கைகள் நாடாள்வோரின் கவனத்துக்கு நாள் தவறாமல் பல கட்சிகளும் வைத்த வண்ணம் இருக்கும் கோரிக்கைகள்!

அவர் மெல்லப் பேசலானார். எனக்கு, அவருக்குக் களைப்பு மேலீட்டுவிடுமே என்று பயமாக இருந்தது. அவரோ, தமக்கு 'முடிவு' விரைவிலே இருக்கிறது என்ற எண்ணத்தினாலோ என்னவோ என்னிடம் பேச வேண்டியதைப் பேசிவிட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டவர் போலப் பேசினார்.

'நான் சாவதலனாலாவது ......................"

— என்று அந்த உத்தமர் என்னிடம் சொன்னார்.

தமிழர் சமுதாயம் இன்று அடைந்துள்ள சீர்கெட்ட நிலையை உணராது இதுபோலப் பேசுகிறாரே என்று நான் எண்ணி வருந்தினேன்,

பொட்டி சீராமுலு உண்ணாவிரதம் இருந்தார். ஆந்திரம் அலறித் துடித்தது!

சங்கரலிங்கனார் சாகக் கிடக்கிறார் என்று தெரிந்து, தமிழகம் என்ன கோலம் கொண்டிருந்தது?

எப்போதும் போல மாணவ மணிகள்தாம், தமிழ் இனம் இன்னமும் தலை தூக்கவே முடியாத நிலைக்குத் தாழ்ந்து அழுந்தி விடவில்லை என்பதைக் காட்டும் விதத்தில் மௌன ஊர்வலம் நடத்தியும், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியும் தம் கடமையைச் செய்தனர்.

மதுரையிலும் வேறு இரண்டோர் இடங்களிலும் நமது கழகம் அனுதாபக் கூட்டம் நடத்திற்று.

மற்றப்படி பார்க்கும்போது, தமிழகம்.......................அமைதிக் கோலத்தில்தான் இருக்கிறது!

இந்தத் திங்கள் (அக்டோபர் 1956) 21-ஆம் நாள் தமிழகம் தன் கடமையைச் செய்யும்—நாடெங்கும் அனுதாபக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது, ஒருவகையில் ஆறுதல்தான்.

'தமிழ் நாடு' பெயர் சூட்டுவோம்

அந்த உத்தமர் தம் இன்னுயிரை ஈந்தாரே — நாம் என்ன செய்யப் போகிறோம் ?

'தமிழ் நாடு' என்கிற பெயர் பெறுவதற்காவது நாம் முனைந்து நிற்க வேண்டாமா ?

ஒப்பற்ற ஓர் உத்தமரின் தியாகம் இதற்குக் கூடவா வழி ஏற்படுத்தாது ?

சங்கரலிங்கனாருடைய உள்ளத்தில் ததும்பிக் கொண்டிருந்த ஆசையில், ஒன்றை ஒன்றையாவது — தமிழ்நாடு' என்கிற பெயர் தரும் காரியத்தையாவது — செய்யக்கூடாதா என்று ஆட்சியைக் கேட்கும் அளவுக்காவது தமிழகம் செயல்படலாகாதா ?

அந்தோ! அருமைத் தியாகியே! தமிழகத்திலே அன்றோ உன் அரும் பெரும் தியாகம் கண்டனர் !

தாசர் புத்தி தலைக்கேறி விட்ட தமிழகம் ஆயிற்றே !

தருக்கரிடம் சிக்கிச் சீரழிந்து கிடக்கும் தமிழகம் ஆயிற்றே !

உண்மைத் தியாகத்தின் உயர்வு அறியாத உலுத்தர்கள் உயர் இடம் பிடித்துக் கொண்டு, அன்பு, அறம் ஆகியவற்றை அழித்தொழிக்கும் நிலை வந்துற்ற தமிழகம் ஆயிற்றே !

இங்கே அறம் ஏது ? வீரம் எங்ஙனம் எழும் ? நீதிக்கு வழி ஏது ? நிமிர்ந்து நின்று உரிமை பேசுவோர் யார் ?

— என்றெல்லாம் அழுதபடி கேட்கத் தோன்றுகிறது.

அறம் வெல்லும்

வீரத் தியாகி சங்கரலிங்கனாருக்கு நாம் அனைவரும் நமது நெஞ்சு நெக்குருக வணக்கம் கூறுகிறோம்.

21 — 10—56 தம்பிக்கு கடிதம்

நாட்டு மக்களில் 16-இலட்சம் பேர் நமது கழகத்துக்கு ஓட்டு அளித்தனரே, அது அல்லவா ஆச்சரியம், மான்செஸ்டர் கார்டியனுக்கு இது தெரியாது இப்போது இது தெரிவித்தாலும் புரியாது, ஆனால் இவ்வளவு எதிர்ப்பு நெருப்பை நீந்தி, நம்மில் பதினைந்துபேர் வெற்றியை அடைந்தோமே, அது நேர்மை உள்ளம் படைத்த அனைவருக்கும்

நம்மிடம் உள்ள மதிப்பினை, நிச்சயமாக அதிகப்படுத்தி இருக்கிறது என்பதிலே ஐயமில்லை.

நமக்கு எவ்வளவு எதிர்ப்புக்குப் பிறகு இத்துணை ஓட்டுகள் கிடைத்தன என்பது மட்டுமல்ல, நான் உன்னைக் கவனிக்க சொல்வது. நாம் எவ்வளவு தவறுகள் செய்திருக்கிறோம் அவ்வளவுக்கும் பிறகு நமக்கு இந்த அளவு ஆதரவு திரண்டதே அதனைக் கவனிக்கச் சொல்லுகிறேன்.

என்னைப் பொறுத்த வரையிலும் சரி, என்னுடன் மிக அதிகமாக நெருங்கிப் பழகிடும் என் தம்பிமார்கள் பலரைப் பொறுத்தவரையிலும்கூட, கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாகவே தேர்தலில் ஈடுபடுவது என்றாலே, ஒருவிதமான 'கசப்பு' இருந்து வந்தது. ஓட்டுக் கேட்பது என்பதையே ஏதோ செய்யத்தகாத, செய்யத் தேவையற்ற ஒரு காரியம் என்றே கருதி வந்திருக்கிறோம். இந்த நாட்டு மக்கள் யார் எதை சொன்னாலும், இனிக்க இனிக்கச் சொன்னால், எதனையும் நம்பி விடுகிறார்கள். நாம் கூறும் உண்மைகளோ மக்களுக்குக் கசப்பாகவும் கிலி மூட்டுவதாகவும் இருக்கின்றன. அதனாலேயே நம்மை அவர்கள் வெறுக்கிறார்கள். இந்த நிலையில், அவர்கள் நமக்கு ஓட்டுத் தருவார்களா என்ன! சேச்சே! நமக்கேன் பல்லிளிக்கும் வேலை! பொறி பறக்கப் பேசுவோம்! அச்சம் தயை தாட்சணியத்துக்கு இடம் வைக்காமல் பேசுவோம்! கேட்டால் கேட்கட்டும், கேட்காவிட்டால் நாசமாய்ப் போகட்டும்! ஊதுகிற சங்கினை ஊதுவோம், பொழுது விடிகிறபோது விடியட்டும்! என்று இவ்விதமாகவெல்லாம் நினைத்துக்கொண்டு இயக்கப் பணியாற்றிக்கொண்டு வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நாம் தேர்தலில் ஈடுபட்டபோது, அதிலே மிகுதியான சுவையும், அந்தச் சுவை மட்டுமே தரக்கூடிய சுறுசுறுப்பும் எங்ஙனம் பெறமுடியும்.

உன்னிடம் கூறிக்கொள்வதிலே தவறு என்ன தம்பி! நான் காஞ்சிபுரம் பகுதியில், நல்ல முறையில்தான் பணியாற்றினேன். ஆனால், பொதுக் கூட்டத்திலேயும் சரி, தனித்தனியாக மக்களிடம் அணுகியபோதும் சரி, 'ஓட்டு' தரச்சொல்லி, கேட்க முடியவே இல்லை விருப்பமில்லாததால் அல்ல; முறை தெரியாததால்! உடன் வந்தவர்கள் தான் பேசுவர். நான், நாக்கு கட்டுண்ட நிலையில் நிற்பேன்; மெத்தச் சிரமப்பட்டு, நான் சொல்லக்கூடியதெல்லாம்.

பார்த்துச் செய்யுங்கள்
கூட இருங்கள்
வரட்டுமா
என்ன? செய்கிறீர்களா?

என்ற இவைகளேதான்! மேலால் பேசமுடியவில்லை—தெரியவில்லை. அதுபோன்றே. நான் பேசிய பொதுகூட்டங்கள் ஏராளம்—இரண்டே இரண்டு கூட்டங்களிலேதான், எனக்கு 'ஓட்டு' போடுங்கள் என்று கேட்க முடிந்தது—உதயசூரியன் பெட்டியில் ஓட்டுப்போடுங்கள் என்று கேட்டேன். உடனிருந்த நண்பர் கூட, அப்பா! பரவாயில்லையே! அண்ணா ஓட்டுப் போடச் சொல்லிக் கேட்டுவிட்டாரே! என்று வேடிக்கையாக வியந்துரைத்தார்!

என் நிலைதானே, நமது அபேட்சகர்களிலே பலருக்கும் இருந்திருக்கும். பல ஆண்டுக் காலமாக,

பொறிபறக்கப் பேசுவது
கண்டதுண்டமாக்கிக் காட்டுவது
எதிர்ப்பு வாதங்களை முறியடிப்பது
விளக்கம் தருவது
வீர முழக்கம் புரிவது
வரலாற்றுச் சம்பவம் தருவது

போன்ற முறைகளிலேயே பழகிப் போயிருக்கிறோம். அப்படிபட்ட நாம் மக்களிடம் கனிவாகப் பேசி, அவர்கள் அலட்சியம் காட்டினால் தாங்கிக்கொண்டு, புரியாதவர்களாக இருந்தால் பொறுமையை இழக்காமல், ஓட்டு கேட்கும் முறையை எப்படி எளிதாகக் கற்றுக் கொள்ள முடியும். கேள், தம்பி என் கதையை! தங்கவேலர், என்னை 'ஓட்டு' கேட்பதற்காக முதல் நாள் கோவிந்தவாடி என்ற கிராமத்துக்கு அழைத்து கொண்டு சென்றார் — அழைத்துக் கொண்டு சென்றார் என்று கூறுவதைவிட, இழுத்துக் கொண்டு சென்றார் என்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

நாலைந்து கிராமத்துப் பெரியவர்களைச் சந்தித்தோம் — சந்தித்தோம் என்று கூறுவதைவிட, எங்களைப் பார்க்கும்படி சிரமப்பட்டு அவர்கள் எதிரில் சென்று நின்றோம்,

தங்கவேலர் துவங்கினார், "இதோ — நம்ம அண்ணாதுரை — நம்ம தொகுதிக்கு நிற்கிறார் — சட்டசபைக்கு நல்லவர் — படிப்பாளி தமிழ் நாட்டில் ஒரு தலைவர் — " என்று விவரித்தார்.

கேட்டுக் கொண்டிருந்தவர்கள் முகத்திலே ஒருவிதமான மலர்ச்சியும் இல்லை ; எனக்குச் சிறிதளவு வெட்கமாகக்கூட இருந்தது.

சில நிமிடங்கள் தங்கவேலர் பேசிவிட்டு, பிறகு கிராமத்துப்

பெரியவர்களின் பதிலை எதிர்பார்த்தார்! தம்பி பதில் வெளிவந்தது. நான் பயந்து போனேன், போபம் கூடத்தான்!!

"அது சரிங்க! எலக்ஷனுக்கு வருகிற ஒவ்வொரு வரையும் தான் இந்திரன் என்று சொல்றீங்க. சந்திரன் என்று சொல்றீங்க நாங்க என்னத்தைக் கண்டோம்!"

இது அவர்கள் அளித்த பதில்! ஓட்டு கேட்கச் சென்ற எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பாரேன் தம்பி!

கோவிந்தவாடி, காஞ்சிபுரந்துக்கு வெகு அருகாமையில் உள்ள சிற்றூர் — ஐந்தாறு மைல்களுக்குத்தான் தொலைவு. அங்கு. அங்கு. இவ்விதம், "வரவேற்பு!" எப்படி இருந்திருக்கும், என் எண்ணம் என்பதை நினைத்துப் பாரேன்!

ஓட்டு கேட்டுக் கேட்டுப் பழக்கமாகி இருந்தால், இவ்வளவு அக்கரையற்றும் அலட்சியமாகவும் பேசியவர்களிடம்' மளமள வென்று பதில் பேசிடத் தெரிந்திருக்கும். நமது கழகம்தான் தேர்தல் அலுவலில் இது நாள் வரை ஈடுபடவில்லையே, பதில் ஏதும் கூறத் தோன்றவில்லை!

தம்பி! இதே கோவிந்தவாடி, எனக்கு 'ஓட்' அளிக்காமல் இருந்து விடவில்லை; நிறைய அளித்தார்கள்; ஆதரவு கிடைத்தது

தேர்தல் காரியத்திலே ஈடுபாடுகொண்டு, நாம் சுவையும் சுறு சுறுப்பும் வழியும் வகையும் பெறவில்லை.

பொதுவாகவே ஒரு தேர்தலுக்குத் தேவையான அளவு வசதி இல்லை! அத்துடன் இந்தக் குறை வேறு! இந்த நிலையில் நமக்குப் பதினாறு இலட்சத்துக்குமேல் 'ஓட்டுகள்' கிடைத்தன என்பதிலே தான், வியப்பு இருக்கிறது!

நாமக்கல் அடுத்த சிற்றூர் ஒன்றிலே, மாலை சுமார் ஐந்து மணிக்கு, நான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஏழாம் தேதி! திடீரென்று, தண்பர், சித்தய்யன். என் காத்திலிருந்த மைக்கை' வெடுக்கெனப் பறித்துக்கொண்டு,

ஒரு சந்தோஷமான செய்தி
ஒரு மகிழ்ச்சியான செய்தி
நம்ம அண்ணா எம். எல். ஏ. ஆகிவிட்டார்
எலக்ஷனில் ஜெயித்துவிட்டார்

என்று சிரிப்பும் பேச்சும் குழையக் குழையக் கூறினார்.

தம்பி ! கோவிந்தவாடி கிராமத்திலே, நான் கண்ட முதற் காட்சியையும், நாமக்கல் அருகே உள்ள சிற்றூரில் சித்தய்யன் என்னிடமிருந்த 'மைக்'கைப் பறித்துக்கொண்டு பேசிய காட்சியையும், மனக்கண்ணாலே பார். படமும் தெரியும் பாடமும் கிடைக்கும்.

தம்பிக்கு 7—4—1957

தம்பி ! உன் உழைப்பின் பலனாக, நானும் மற்றும் பதினான்கு நண்பர்களும் பட்ட சபை செல்கிறொமல்லவா ? அங்கு எவரெவரைக் காணப்போகிறோம், என்பதை எண்ணிப் பார்க்கும்போதே. கழகத்துக்குக் கிடைத்த வெற்றி போலப் பத்து மடங்கு வெற்றி காங்கிரசுக்குக் கிடைத்திருப்பினும், அந்த வெற்றியைப் பெற, எத்தகைய விலை கொடுக்கப்பட்டது என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

ராஜா சர். முத்தையா செட்டியார், 'கெம்பீரமாக' அமர்ந்திருக்கக் காண்பேன் — அவரும் நானும் சந்திக்கும்போது என்னென்ன எண்ண அலைகள் எழும், இருவர் உள்ளங்களிலும் !

சர்தார் படேல் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்து, காங்கிரசுக்கு நிதி திரட்டினார் — தமிழர்கள் ஏமாளிகள் வடநாட்டுத் தலைவர்களிடம் பணத்தை இழந்துவிட்டுப் பல்லிளிக்கப் போகிறார்கள் — இதை நாம் தடுத்தாக வேண்டும் என்று. தீர்மானித்த ராஜா. சர் என்னை வரவழைத்து. படேலிடம் பணம் கொடுக்காதீர்கள் என்று மக்களைக் கேட்டுக் கொள்ள ஒரு அறிக்கை தயாரிக்கச் சொன்னார் —

படேல் வருகிறார்

பணப்பை ஜாக்ரதை !

என்ற தலைப்புடன், அந்த அறிக்கை தயாரானதும், ராஜா. சர் எவ்வளவு குதூகலமடைந்தார் ! அவர் காங்கிரஸ்காரராக ! நான் எதிர்க்கட்சியில் ! ! அன்றும் அவர் 'ராஜா' ! இன்றும் அதே ! ! அன்றும் அவர் ஆளும் கட்சியிலே ஓர் உன்னத இடம் பெற்றிருந்தார் ! இன்றும் அவருக்கு அதே அந்தஸ்து ! ! நான் காங்கிரஸ் ஆட்சியை, மக்களுக்கு உகந்ததல்லாதன செய்யும் போது கண்டித்துப் பேச முற்பட்டால், ராஜா. சர், 'காரசாரமாக' என்னைத் தாக்கக்கூடும் ! காங்கிரஸ் கட்சியின் திட்டம் சுவைக்கு உதவாது ! அதன் போக்கு காட்டுத்தனமானது ! என்று அன்று பேசினார் — இன்று கழகமாம் கழகம் — என்ன கஎகம், மகாகளகம் என்று பேசுபவர்களின் நடுவில் அமர்ந்து ஒளிவிட இருக்கிறார்,

அடிபட்டவனும் அவதிப்பட்டவனும், 'தியாகி' என்ற பட்டம் மட்டும் பெற்று, வறுமை கொட்ட, வேலையில்லாத் திண்டாட்டம் வாட்ட கவனிப்பாரற்றுக் கசிந்து கண்ணீர் மல்கிக் கிடக்கின்றனர். இதோ கொலு வீற்றிருக்கிறார்கள் கோடீஸ்வரர் !

அந்தப் 'பாவ' த்திலே தம்பி தெரிந்து அல்ல, தெளிவு இல்லாத தால், தவறு செய்ய நேரிட்டு விட்டதால், நமக்கும் பங்கு இருக்கிறது.

ராஜா, சர், இரண்டாயிரத்துச் சொச்சம் ஓட்டுகள் அதிகம் பெற்று, 'வெற்றி' பெற்றார் ; அந்த இரண்டாயிரத்துச் சொச்சம் ஓட்டுகளை நமது கழக அபேட்சகர்தான் மடக்கிக் கொண்டார் — அந்த ஓட்டுகள் காங்கிரசை எதிர்த்து நின்றவருக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்—ராஜா சர். தோற்றிருப்பார் — தவறு நம்முடையது, நம்முடையது என்று எண்ணும்போதெல்லாம், நான் வேதனை அடைகிறேன், மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளத் துடிக்கிறேன்.

இது போலப் பல தவறுகளைச் செய்துவிட்டோம் — போதிய அனுபவம் இல்லாததால் ! !

தம்பிக்கு 21—4—1957

தம்பி ! நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நாட்களிலே, இந்தக் 'கோட்டை' யிலும் சூழவும் என்றென்றும் நம்மை யாரும் அசைக்க முடியாது என்ற எண்ணத்தைக் கொண்டு கிடந்த வெள்ளை யர்களைக் கண்டிருக்கிறேன். அவர்களின் நடமாட்டத்தைக் கண்டு நடுங்கி, நம்மவர்கள், அடங்கி ஒடுங்கிச் சென்றதையும் கண்டிருக்கிறேன்.

அவனே, 'எதிர்காலம்' இப்படி எல்லாம் வடிவெடுக்கக் கூடும் என்பதனை அறிந்து கொள்ளாதிருந்தான் என்றால், ஆளவந்தார் களாகிவிட்ட காங்கிரசார், எங்ஙனம், 'எதிர்காலம்' எப்படியெல்லாம் உருவாகிக்கொண்டு வருகிறது என்பதை அறிந்திட முடியும்.

குற்றம் அவர்கள்மீது அல்ல, தம்பி ! கோலெடுப்போரில் பெரும் பாலோர், குறைமதியையே துணையாகக் கொண்டழிந்து பட்டனர் !

'கோட்டைக்'குள்ளே நுழைந்தபோது, இதுபோலெல்லாம் எண்ணிக்கொண்டேன் !

பீரங்கிக்குப் பக்கத்தில் நாம் நிற்கிறோம் — ஒரு மூங்கிலாலான கொடிமரத்தின் கீழே நின்றுகொண்டு, கொக்கரிக்கிறார்களே, சுய ராஜ்யம் வேண்டும் என்று ! ! கோட்டை எம்மிடம் — வெட்ட வெளி

நின்று வீரம் பேசுகிறார்களே ! — என்று, அன்று ஆங்கிலேயன் ஆணவத்தால் பேசினான். இன்று.........! ! — என்று எண்ணிக் கொண்டேதான் உள்ளே சென்றேன்.

வாழ்த்தொலி ! ஆமாம் ! கோட்டையானாலென்ன, கொத்தள மானாலென்ன—எப்படியோ பெருந்திரள் கூடிவிட்டது, வாழ்த்தொலி கூறிட ! !

இந்தப் 'பதினைந்துக்கே' இவ்வளவு ஆர்ப்பாட்டமா............... என்ற அலட்சியத்தைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, காங்கிரஸ் அன்பர்கள் உள்ளே நுழைந்தனர்.

கொட்டும் மழையில், குடையுமின்றி, எட்டாண்டுகளுக்கு முன்பு, இராயபுரத்தில் ஓர் வெட்டவெளியில், நின்று பேசினோம் — நினைவிலே இருக்குமே, தம்பி ! ? பெரியாரின் போக்கால் நாம் அதுவரை உகுத்த கண்ணீரின் அளவினைக் காட்டுவதற்கு இயற்கை எடுத்துக் கொண்ட முயற்சி போன்றிருந்ததல்லவா. அன்று பெய்த மழை ; அன்று துவக்கப்பட்ட, திராவிட முன்னேற்றக் கழகம், சதிகளைச் சகித்துக்கொண்டு, சூழ்ச்சிகளுக்கு இரையாகாமல், எதிர்ப்புகளால் முறிந்து போகாமல், பழிச் சொல்லால் பாழ்படாமல், நம்மை அழித்தொழிக்க எண்ணுவோர் எத்துணை தரக்குறைவாக நடப்பினும், நாம் நமது முறையையும் நெறியையும் தரம் கெடாமல் பார்த்துக் கொண்டு, மக்களின் நம்பிக்கையை மெள்ள மெள்ளப் பெற்று அரசியல் கழைக் கூத்தாட்டம் நடத்தாமலும், மயிர்க்கூச்செரிய வைக்கும் செயல்களைச் செய்து காட்டாமலும், அந்த நம்பிக்கையை நமது பண்பு நிறைந்த பணியின் மூலமே பெற்று, ஒரு பொதுத் தேர்தலில் ஈடுபட்டு, அந்தப் பாரத்தைத் தாங்கிக்கொண்டு, ஒரு பதினைந்து பேர், கோட்டைக்குள்ளே நுழைந்திடத் தக்க நிலையையும் பெற்றிருக்கிறோம்.

மணி பதினொன்று — நல்ல வெயில் — எனினும், என் மனக் கண்முன், அப்போது, துவக்க நாளன்று பெய்த மழைதான் தெரிந்தது.

அடாது மழை பெய்தாலும் விடாது கூட்டம் நடந்தே தீரும் என்று குடந்தை நீலமேகம் பேசின காட்சி தெரிந்தது ! !

திராவிட நாடு 5—5—1957

(தொடரும்)

# திரட்டு

## புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விழா

திராவிடர் கழகம், பகுத்தறிவாளர் கழக அமைப்புகள் இணைந்து இவ்வாண்டு புரட்சிக்கவிஞர் விழாவை — தமிழர் பண்பாட்டுப் புரட்சி விழாவாக சென்னையில் 3 நாள்கள் நடத்துகின்றன. நேற்று கலைஞர் கருணாநிதி நகரில் முதல் நாள் நிகழ்ச்சி எழுச்சியுடன் துவங்கியது.

சென்னை, கலைஞர் கருணாநிதி நகர் — பாரதிதாசன் குடியிருப்பு வளாகத்தில் புரட்சிக் கவிஞர் விழா — தமிழர் கலை பண் பாட்டுப் புரட்சி விழாவின் முதல் நாள் நிகழ்ச்சி 28-4-94 இரவு 7 மணி யளவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

எழுச்சிமயமான இவ்விழாவிற்கு தலைமை நிலைய செயலாளர் ஆனூர் ஜெகதீசன் தலைமை வகித்து உரை நிகழ்த்தினார். மாநில பகுத்தறிவாளர் கழக பொதுச்செயலாளர் கவிஞர் செ. வை. ர. சிகா மணி முன்னிலை வகித்தார்.

மேடையில் புரட்சிக் கவிஞர் கவிதைகள் தொகுப்பாளரும், உவமைக் கவிஞர் சுரதாவின் புதல்வருமான கல்லாடன், பெரியார் கருத்துப் பரப்பாளர் கல்பாக்கம் வ. வேம்பையன், கடமை உணர்வுள்ள அலுவலர் சூர்யமூர்த்தி, பாரதிதாசன் குடியிருப்பு நல் வாழ்வு சங்க பொருளாளர் செல்வம் ஆகியோருக்கு கழகப் பொதுச் செயலாளர் சால்வை அணிவித்து தந்தை பெரியார் உருவம் பொறித்த விருதை வழங்கி பாராட்டி உரை நிகழ்த்தினார்.

சென்னை பெரியார் திடலில் 29-4-94 புரட்சிக் கவிஞர் விழா — இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற மகளிர் கருத்தரங்கில்.

சென்னை தொலைகாட்சியில் செய்தி வாசிக்கும் திருமதி பாத்திமா பாபு, விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த செல்வி அமுதா ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

சென்னை பெரியார் திடலில் 30-4-94 அன்று நடைபெற்ற புரட்சிக் கவிஞர் நிறைவு விழாவில் தமிழ்த் திரைக் கலைஞர்களான புரட்சிக் கலைஞர் விஜயகாந்த், இயக்குனர் ஆர். சுந்தர்ராஜன், பழம்பெரும் நடிகர் கே. ஏ. தங்கவேலு ஆகியோருக்கு பெரியார் விருதுகளை வழங்கியும், பாராட்டுக்குரிய தமிழர்களான 'சரவண பவன்' உணவு விடுதி உரிமையாளர் பி. ராசாகோபால், எழுத்தாளர் ஊ. ஜெயராமன் சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றச் செயலாளர், கெ பக்த வத்சலம் சென்னை மணவழகர் மன்றச் செயலாளர் கே. கன்னியப்பன் ஆகியோருக்கு பெரியார் உருவம் பொறித்த சான்றிதழ்கள் வழங்கியும், கழகப் பொதுச் செயலாளர் பாராட்டிப் பேசினார்.

நன்றி—'விடுதலை'

★ ★ ★

## நெல்சன் மண்டேலா பதவி ஏற்பு

கறுப்பர் இனமக்கள் பெரும்பான்மையினர வாழும் தென் ஆப்பிரிக்காவில் தேர்தல் நடந்தது இதில் கறுப்பர் இன மக்களின் தலைவர் நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கப்பட்டார். நேற்று பிரிடோரியா நகரில் நடந்த கோலாகல விழாவில் அவர் பதவி ஏற்றார். இதன்மூலம் அங்கு 300 ஆண்டுகளாக நடந்த வெள்ளையர் ஆட்சி முடிவுக்கு வந்தது. கறுப்பர்இன மக்கள் ஆனந்தக்கூத்தாடினார்கள்.

ஆப்பிரிக்காவின் தென்கோடியில் உள்ள தென் ஆப்பிரிக்காவில் கறுப்பர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். ஆனால் அங்கு கடந்த 300 ஆண்டுகளாக நிறவெறி வெள்ளையர் ஆட்சி நடந்து வந்தது. கறுப்பர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. ஒட்டுரிமைகூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை சொந்தடிமைகளாய் நடத்தப்பட்டனர்.

### மண்டேலா !

கறுப்பர்களின் உரிமைகளுக்காக நெல்சன் மண்டேலா போர்க்கொடி தூக்கினார். இதற்காக ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் என்ற இயக்கத்தை அவர் தொடங்கினார். அவரது போராட்டத்தை சகிக்க இயலாத வெள்ளையர் அரசு அவரை சிறையில் அடைத்தது, 27 ஆண்டுகள் மண்டேலா சிறையில் வாடினார்.

## ஒட்டுரிமை !

நீண்ட போராட்டத்துக்கு பிறகு கறுப்பர் இன மக்களுக்கு சுதந்திரம் அளிக்க வெள்ளையர் அரசு முன் வந்தது.

அதைத்தொடர்ந்து முதன் முறையாக கறுப்பர் இன மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. சமீபத்தில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது. அதில் கறுப்பர் இன மக்களும் வாக்களித்தனர்.

இந்த தேர்தலில், மண்டேலாவின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி பெற்றது அந்த கட்சிக்கு மூன்றில் 2 பங்கு வாக்குகள் கிடைத்தன. வெள்ளையர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது

## ஜனாதிபதியாக தேர்வு

நேற்று முன்தினம் புதிய பாராளுமன்றத்தின் முதல கூட்டம் நடந்தது. அதில் நெல்சன் மண்டேலா, தென் ஆப்பிரிக்காவின் முதல் கறுப்பர் ஜனாதிபதியாக போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

'தினகரன்'

★ ★ ★

## பஞ்சாபில் !

பஞ்சாப் மாநிலத்தில் 6 சீக்கியர் கட்சிகள் இணைந்து புதிய கட்சி தொடங்கி உள்ளன. அதற்கு "சிரோமணி அகாலிதளம்" என்று பெயரிட்டு உள்ளனர் சீக்கியர்களுக்கு தனிநாடு பெறுவதே புதிய கட்சியின் லட்சியம் என்று முன்னாள் முதன்மந்திரி பர்னாலா கூறினார்.

## பொற்கோவில் !

இந்திய யூனியனில் இருந்து பஞ்சாப் மாநிலத்தை தனிநாடாக பிரிக்கவேண்டும் என்று வற்புறுத்தும் சீக்கியர்கள் இதுவரை பல கட்சிகளாக செயல்பட்டு வந்தனர்.

அந்த கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் நேற்று (ஞாயிறு) அங்குள்ள அமிர்தசரஸ் நகரில் இருக்கும் சீக்கியர்களின் பொற்கோவிலில் கூடினர்.

## சிம்ரஞ்ஜித்சிங்மான் !

அதில் பஞ்சாப் முன்னாள் முதன்மந்திரி பர்னாலா (பழைய தமிழக கவர்னர்). சிம்ரஞ்ஜித்சிங்மான், மன்சித்சிங், கர்னல் ஜாஸ்மர்சிங்,

ஜக்தேவ்சிங் தல்வண்டி, அம்ரிந்தர்சிங் தோரா உள்பட பல தலைவர்கள் கலந்துகொண்டனர்.

அவர்கள் ஒரே கட்சியின் கீழ் செயல்படுவது பற்றி நீண்ட நேரம் ஆலோசித்தனர்.

சிரோமணி அகாலிதளம்!

பிறகு அவர்கள் புதிய கட்சி தொடங்குவதற்கு முடிவு செய்தனர். அதற்கு ''சிரோமணி அகாலி தளம்'' (அமிர்தசரஸ்) என்று பெயரிட்டு உள்ளனர். 'தினகரன்'

★ ★ ★

## பள்ளிகளில் பிரார்த்தனைக்கு இடமில்லை!

விஞ்ஞானத்தில் கொடிகட்டிப்பறக்கும் அமெரிக்காவின் இன்னொரு பக்கம் கிறிஸ்தவ மதம் வியாபித்திருப்பது உலகுக்கே தெரிந்த ஒன்று. சுருக்கமாக சொன்னால் அமெரிக்கர்கள் டார்வினை விட பைபிளை நிறைய நம்புவார்கள். ஆனால் ஆச்சரியமான ஒரு விஷயம் அமெரிக்க பள்ளிக்கூடங்களில் எதிலும் பிரார்த்தனை கிடையாது. மதவாதிகள் பள்ளிகளில் பிரார்த்தனை வைக்க வேண்டுமென்று தொடர்ந்து போராடி வருகிறார்கள். அமெரிக்க சட்டசபையில் தொடர்ந்து பதிநான்கு முறை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது இந்த பிரச்சினை. சென்ற மாத இறுதியில் எடுத்த விவதாமும் தோற்றுப்போனது. கடவுளை வணங்குவதும், வணங்காததும் அவரவரின் தனிப்பட்ட உரிமை. பல மதத்தை சேர்ந்த மாணவர்கள் படிக்கும் பள்ளியில் பிரார்த்தனையை அனுமதிப்பது சமூக குற்றமாகும் என்று அமெரிக்க அரசு மறுத்து விட்டது. 'தினகரன்'

★ ★ ★

# காலத்தின் கருவூலங்கள்

முப்பதாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தங்களிடையே பேசும் மொழியாக வளர்ந்து. இருபதாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நாட்டுப்பா செய்யும் நாவினராய் இலக்கியம் வடித்து. பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னரே எழுத்து வடிவம் முறையும் கண்டு, ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வகை கண்டு வளர்ந்து, மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வரையப்பட்ட ஐந்திற இலக்கணமாம் தொல்காப்பியத்தையும் பெற்று. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே பிறந்த இணையற்ற வாழ்வியல் விளக்

கும் அறநூலாம் திருக்குறளையும் கொண்டு அக்காலத்தை ஒட்டிப் பிறந்த சங்கத்தமிழ்த் தொகை நூல்க்ளாம் எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் கண்டு, தொடர்ந்து செந்தமிழ் வளர்க்கும் முத்தமிழ்க் காப்பியமாம் சிலம்பினையும், புத்தம் பரப்பும் மணிமேகலையையும் பெற்று, அடுத்து, திருமூலர் திருமந்திரத்தையும், மணிவாசகர் திருவாசகத்தையும், மூவர் தேவாரத்தையும் ஆழ்வார்கள் பாசுரத்தையும், திருத்தக்க தேவரையும், கம்பரையும், சேக்கிழாரையும், கச்சியப்பரையும், செயங்கொண்டாரையும், வில்லிபுத்தாரரையும், அருணகிரியாரையும் தாயுமானாரையும்,வடலூர் வள்ளலாரையும், பாரதியாரையும், பாரதிதாசரையும் பெற்றுள்ள பெருமைக்குரிய தமிழ் இனத்தாரின் வாழ்வில்தான், திருமணங்கூடத் தமிழில் நடைபெறவில்லை. நம்மை வாழ்விக்கும் தமிழுக்கு அந்தத் தகுதிகூட இல்லை என்று, தமிழரே நடைமுறையில் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றால், அதை என்னவென்று கூறலாகும்? இப்படிப்பட்ட இழிவான நிலை உலகில் எந்த இனத்திற்கேனும் ஏற்பட்டுள்ளதா? ஏற்படவும் கூடுமோ?

(—இனமானப் பேராசிரியர் டாக்டர் க அன்பழகனார் அவர்கள் எழுதி வெளிட்டுள்ள ''தமிழர் திருமணமும் இனமானமும்'' என்ற நூலிலிருந்து)

# சாதிக்பாட்சா மறைந்தார்

## பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை இரங்கல்.

சாதிக்பாட்சா 1928-ம் ஆண்டு உடுமலைப்பேட்டையில் பிறந்தார். திவான் குடும்ப வாரிசான அவர் சட்டம் பயின்று வழக்கறிஞராக பணியாற்றினார்.

### 11 ஆண்டு அமைச்சர்

அண்ணாவின் பேச்சால் கவரப்பட்டு 1957-ம் ஆண்டு தி மு க. வில், இணைந்தார். தொழிற்சங்க பணியைத் தொடர்ந்து 1967—ல் அண்ணா தலைமையில் அமைந்த அமைச்சரவையில் பொதுநலத்துறை அமைச்சராக பொறுப்பேற்றார். அண்ணா, கருணாநிதி அமைச்சரவையில் 11 ஆண்டுகள் அமைச்சராக பணிபுரிந்துள்ளார்.

### திருமணம் !

அண்ணாவின் வற்புறுத்தலின் பேரில் 39-வது வயதில் ஷர்புன்னிசாவை திருமணம் செய்தார். மகன் முஷ்டாக்பாஷ பொறியியல் கல்லூரியில் பி. ஈ. படித்து வருகிறார். மகள்கள் ஷாகினின் ஹினாநரஷ் பள்ளியில் படித்து வருகிறார்கள்.

பல ஆண்டுகளாக தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

பொருளாளர் !

1978 முதல் தி.மு க.வில் பொருளாளராக பணியாற்றி வருகிறார். சமீபத்தில் 5-வது முறையாக பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்'

அமைச்சர் பதவி உள்பட பல்வேறு பொறுப்புள்ள பதவிகளை வகித்திருந்தாலும் சாதிக்பாட்சாவுக்கு சொந்த வீடு கிடையாது. பட்டினப்பாக்கத்தில் உள்ள அரசு குடியிருப்பில் 2-வது மாடியில் உள்ள வாடகை வீட்டில் வசித்து வந்தார்.

1990-ல் தி மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு உடல் நலம் குன்றும்வரை சென்னை உயர்நீதிமன்றத்தில் பிசியான வழக்கறிஞராக பணிபுரிந்தார்.

நிறைய புத்தங்கள் படிக்கும் பழக்கமுடைய சாதிக்பாட்சா ''மாநில சுயாட்சி ஏன்'' என்னும் நூலை எழுதியுள்ளார்.

* * *

கவிஞர் பல்லவனின் 'சின்ன நாதிகள்' நூல் வெளியீட்டு விழா

8-5-94 மாலை திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்றது.
இலக்கிய வீதி இனியவன் வரவேற்றார்,
முனைவர் சிலம்பொலி செல்லப்பன் தலைமையேற்றார்.
கவிக்கோ அப்துல்ரகுமான் நூலை வெளியிட்டார்.
திரு நா. சனார்த்தனம் நூலை பெற்றுக்கொண்டார்.
உரிமையாளர் : மாமல்லபவன்
திரு தமிழருவிமணியம்
திரு ஆனூர் ஜெகதீசன்
திரு நா. அருணாசலம்
உரிமையாளர் : அடையாறு மாணவர் நகலகம்.
ஓவியக்கவிஞர் அமுதோன்
கவிஞர் தாராபாரதி ஆகியோர் வாழ்துரைத்தனர்,
கவிஞர் பல்லவன் ஏற்புரை நிகழ்த்தினார்.

# தமிழ்நாடு தையற் கலைஞர்கள் முன்னேற்ற சங்கம்

இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் விழா - பரிசளிப்பு விழா
8-5-94 ஞாயிறு பிற்பகல் 4-00 மணி
பாரதீய வித்யா பவன், கிழக்குமாடவீதி, மயிலாப்பூரில் நடைபெற்றது
G.N. ராவ் தலைவர்—தலைமையேற்றார்,
T.V.S. மணி பொதுச்செயலாளர்—வரவேற்றார்,
இலவசத் தையல் இயந்திரம் வழங்கியவர்

திரு. எம். கோபாலகிருஷ்ணன், தலைவர், இந்தியன் வங்கி.
பரிசு வழங்யவர். திருமதி, C.K. கரியாலி I.A.S.
அரசு செயலர், தகவல்-சுற்றுலாத்துறை
கலைமாமணி திரு. G. வெங்கடேஷ்வரன்
நிர்வாக இயக்குநர், G.V. பிலிம்ஸ்
பாட்டாளி கலைஞர் கலைமாமணி திரு. டெல்லிகணேஷ்
திரு. பொன்குமார் B. Sc., பொதுச்செயலாளர்.
தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர் சங்கம்
திரு. உதயம்ராம், செயலாளர், உரத்தசிந்தனை நல்லோர் வங்கி
திரு. S.R. வரதராஜன், மண்டலமேலாளர், வர்தமான் திரெடீஸ்
திரு. A S. கைலாசம், வழக்கறிஞர், சங்க சட்ட ஆலோசகர்
திரு. R. பாலசுப்ரமணியன், சங்க கணக்குத் தணிக்கையாளர்
ஆகியோர் வாழ்த்துரைத்தனர்.
V. G. விஜயகுமார், பொருளாளர், நன்றிகூறினார்,

---



## நம்பிக்கை

நம்புதல் என்பது சிறு புயற்காற்றிலும் துவளுமடும் மென்மலரல்ல அடிபெயரா இமயம் போன்றது,

பேரறிஞர் அண்ணா

---

## சாதிக்பாட்சா வீட்டில்

# வை. கோ. கார் மீது தாக்குதல்! பயங்கர ஆயுதங்களுடன்!!

சாதிக் உடலுக்கு அஞ்சலி செலுத்த சென்ற வை. கோ. கே பி.கே. மற்றும் முன்னணியினர் மீது பயங்கர ஆயுதங்களுடன் வன்முறைக் கும்பல் தாக்கியது. இதில் அவர்கள் உயிர தப்பினர். கார்கள் அடித்து நொறுக்கப்பட்டன. 5 பேர் காயம் அடைந்தனர்.

### அஞ்சலி !

தி. மு. க. பொருளாளர் சாதிக் பாட்சா நேற்று மாலை மரணம் அடைந்தார். அவரது உடல் பொதுமக்கள் பார்வைக்காக பட்டினப் பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இருந்தது.

நேற்று இரவில் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்த மறுமலர்ச்சி தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி, முன்னாள் அமைச்சர் கே. பி. கந்தசாமி, அவைத் தலைவர் எல் கணேசன், துணை பொதுச் செயலாளர் பொன்முத்துராமலிங்கம் ஆகியோர் ஒரு காரில் சென்றனர்,

அதைத் தொடர்ந்து மயிலை வேட்பாளர் எஸ். தாணு மற்றும் முன்னணியினர் 7 கார்களில் சாதிக் வீட்டுக்கு போன்றார்கள்.

### வன்முறைக் கும்பல் !

பட்டினப்பாக்கத்தில் சாதிக் வீடு முன் வை. கோ. கார் நின்றது. அப்போது 50 பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய கும்பல் நாலாபுறத் திலும் அந்த காரை சூழ்ந்தது. தொடர்ந்து வந்த கார்களையும் அவர்கள் முற்றுகையிட்டனர். உடனே பயங்கர ஆயுதங்களாலும் பெரிய பெரிய கற்களையும் விசி தாக்க தொடங்கினர். இதில் வை. கோ. கார் முகப்பு விளக்குகள் நொறுங்கின, தாணு கார் கண்ணாடிகளும் உடைக்கப்பட்டன.

### உயிர் தப்பினர் !

வன்முறைக் கும்பல் தாக்குதலை தொடர்ந்து வை. கோ. கே, பி, கே. மற்றும் முன்னணியினர் சென்ற கார்கள் உடனடியாக திருப்பப்பட்டன, இருப்பினும் தாக்குதல் நீடித்தது.

பின்னால் வந்த கார்களையும் தொடர்ந்து தாக்கினர். இதில் தாணு கார் பலத்த சேதம் அடைந்தது. அய்யாவு திருநாவுக்கரசு ஆகியோரின் கார்களும் சேதம் ஆயின.

நன்றி — 'தினகரன்'

★ ★ ★

# தி. மு. க. வேட்பாளர் வீட்டில் அ. தி. மு. க. வேட்பாளர் பிரசாரம்!

சென்னை, மே; 11— மயிலை தொகுதி அ. தி. மு. க, வேட்பாளர் கராத்தே பாலசுப்பிரமணியம் நேற்று (செவ்வாய்கிழமை) காலை 9 மணிக்கு 149 — வது வட்டம் வள்ளீசுவரன் கோவில் தோட்டத்தில் இருந்து பிரசாரத்தை தொடங்கினார்,

பின்னர் அதனை சுற்றியுள்ள கபாலி வனபோஜன் தோட்டம், நாராயணசாமி தோட்டம், காமராஜர் ரோடு, சீனிவாசா அவின்யூ ஆர். கே. நகர், கேசவ பெருமாள்புரம், குட்டி கிராமணி தெரு, ராஜா முத்தையாபுரம், ராபர்சன் பேட்டை, மைபிளவர் கார்டன் ஆகிய தெருக்களில் வீடு வீடாக சென்று ஓட்டு கேட்டார்.

மாலையில் தி, மு. க. வேட்பாளர் ராமஜெயம் வீட்டிற்கு அவர் சென்றார். அங்கு அவருடைய மனைவியிடம் ஓட்டு கேட்டார். பின்னர் அதனை சுற்றியுள்ள தெருக்கள் முழுவதிலும் ஓட்டு வேட்டையாடினார். அவருடன் வட்ட பகுதி கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

— 'தினகரன்'

★ ★ ★

முன்னாள் மத்திய அமைச்சர் பாலாபழனூர் நேற்று ம. தி. மு. க. வேட்பாளர் எஸ். தாணுவுக்கு ஆதரவு திரட்டியபடி பட்டினப்பாக்கம் அருகே சாந்தோம் நெடுஞ்சாலையில் சென்று கொண்டு இருந்தார். அப்போது எதிரே கருணாநிதியின் பிரசார வேன் வந்தது.

அந்த வேன் பாலாபழனூர் இருந்த வாகனத்தை கடந்து சென்றது, கருணாநிதியின் வேனை தொடர்ந்து பல வாகனங்களில் தி. மு. க. வினர் வந்தனர். அவர்கள் பாலாபழனூரை பார்த்து வாய்க்கு வந்தபடி திட்டினார்கள். காது கொடுத்து கேட்கக்கூடாத வார்த்தைகளால் வசை பாடினார்கள். அதை பொருட்படுத்தாமல்



JL
M2112, N96ICN
NRG. 36 217290
-600 008

பாலாபழனூரும் ம. தி. மு. க. தொண்டர்களும் அமைதியாக கடந்து சென்றனர்.

மந்தைவெளியில் நேற்று தொண்டர்கள் பின்தொடர திறந்த ஜீப்பில் வை. கோ. வாக்கு சேகரித்தபடி சென்று கொண்டு இருந்தார்.

எதிரே பரிதிஇளம்வழுதி. வெற்றிகொண்டான், ஆடலரசு ஆகியோர் தொண்டர்களுடன் வந்தனர்,

அவர்களை பார்த்ததும் வை. கோ. தனது பிரசாரத்தை நிறுத்திக் கொண்டார். அங்கு பரிதி இளம்வழுதி பேசினார். அவர் பேசும்போது வை. கோ. வை தாறுமாறாக திட்டினார், கண்டபடி ஏசினார். பரிதி அங்கிருந்து கடந்த சென்ற பிறகே வை, கோ. பிரசாரத்தை தொடங்கினார்.

ராஜா அண்ணாமலைபுரம் வள்ளீசுவரன் கோவில் தெருவில் பா. ம. க. வேட்பாளர் செல்வராஜை ஆதரித்து நடிகர் மன்சூர் அலிகான் நேற்று திறந்த ஜீப்பில் பிரசாரம் செய்தபடி வந்தார், எதிரே வை, கோ. வும் வாக்கு கேட்டபடி வந்தார்.

உடனே வை, கோ, தனது பிரசாரத்தை நிறுத்திக்கொண்டார். அதைத்தொடர்ந்து மன்சூர் அலிகான் அங்கு பேசினார். தான் பேசுவதற்காக பிரசாரத்தை நிறுத்திய வை- கோ, வுக்கு மன்சூர் அலிகான் நன்றி தெரிவித்துவிட்டு அங்கிருந்து சென்றார்.

அதே பகுதியில் காங்கிரஸ் வேட்பாளருக்கு பிரசாரம் செய்யும் வைஜயந்திமாலா வேனும் ஜீப்பும் எதிர் எதிரே கடந்து சென்றன. அப்போது வை. கோ,வுக்கு வைஜயந்திமாலா வணக்கம் தெரிவித்தார். பதிலுக்கு வை. கோ, வும் வணக்கம் சொன்னார்.

அம்பேத்கர் பாலம் அருகே முன்னாள் அமைச்சர் கே. பி கந்தசாகி தொண்டர்களுடன் நடந்து சென்று தாணுவுக்கு ஆதரவு திரட்டினார், அப்போது அங்கு குமரிஅனந்தன் தெருமுனை பிரசாரம் செய்து கொண்டு இருந்தார்.

கே. பி, கே. அந்த இடத்தை கடந்து சென்றபோது. குமரி அனந்தன் பேசிக்கொண்டே அவருக்கு வணக்கம் தெரிவித்தார். கே. பி, கே, யும் பதிலுக்கு வணக்கம் சொன்னார்.

— 'தினகரன்'

## மயிலையில் பிரசாரம் :

# தி.மு.க.-காங். வேட்பாளர்கள் நேருக்கு நேர் சந்திப்பு !

## கைகுலுக்கினார்கள்

சென்னை. மே 19—மயிலை தொகுதி தி மு.க. வேட்பாளர் ராமஜெயமும் காங்கிரஸ் வேட்பாளர் தியாகராஜனும் வாக்கு சேகரிக்கச் சென்ற இடத்தில் திடீரென சந்தித்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்துக்கொண்டனர்.

### ராமஜெயம் !

மயிலாப்பூர் தி.மு.க. வேட்பாளர் ராமஜெயம் நேற்று (புதன்) காலை 7 மணி முதல் வீடு வீடாக சென்று பொது மக்களை சந்தித்து ஓட்டு கேட்டார். சீனிவாசபுரம், முல்லிமா நகர், ராஜீவ்காந்தி நகர், பட்டினப்பாக்கம், எம்ஆர்சி நகர், கற்பகம் அவென்யூ லாரன்ஸ் ரோடு ஆகிய பகுதிகளில் அவர் வாக்கு சேகரித்தார்.

### திடீர் சந்திப்பு !

சீனிவாசபுரத்தில் ஓட்டு சேகரித்தபோது அங்கு ஓட்டு கேட்டு வந்த காங்கிரஸ் வேட்பாளர் தியாகராஜனை தி மு.க. வேட்பாளர் ராமஜெயம் சந்தித்தார். இருவரும் கை குலுக்கி ஒருவருக்கொருவர் வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.

தி மு.க. வேட்பாளருடன் வட்ட செயலாளர் தமிழரசன் பூவரசு கிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் சென்றனர்.

### மு. க. ஸ்டாலின் !

தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் மு. க. ஸ்டாலின் நேற்று வேட்பாளர் ராமஜெயத்தை ஆதரித்து கோவில் சாமிநகர், வள்ளீசுவரர் பேட்டை, கே.வி.பி. தோட்டம் என். எஸ். கார்டன், ராபர்ட்சன் பேட்டை, வன்னியம்பதி ராஜா கிராமணி தோட்டம், ராஜா தெரு, சாலை தெரு, ராஜா முத்தையாபுரம், சண்முகபுரம், மாதவ நகர் ஆகிய இடங்களில் திறந்த ஜீப்பில் வீதி வீதியாக சென்று ஓட்டு வேட்டையாடினார்.

அவருடன் துரைமுருகன், கோ, சி. மணி' தேரு, தமிழ் குடிமகன், சைதை கிட்டு, டி. ஆர். பாலு, ரகுமான்கான், ஆர் சந்திரன் மற்றும் நிர்வாகிகள் உடன் சென்றனர்.

★ ★ ★

### பெருந்துறை தேர்தல் பிரசாரத்தில்

# வை. கோபால்சாமி - மூப்பனார் திடீர் சந்திப்பு!

### கட்டித்தழுவி நலம் விசாரித்தனர் ! !

ஈரோடு, மே. 16-பெருந்துறை தொகுதி பிரசாரத்தின்போது' வை. கோபால்சாமியும், மூப்பனாரும் திடீரென சந்தித்துக் கொண்டனர். ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி நலம் விசார்த்தனர்,

#### மூப்பனார்!

பெருந்துறை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக காந்தி போட்டியிடுகிறார், இவர். தொகுதி முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஓட்டு வேட்டையாடி வருகிறார். இவருக்கு ஆதரவு திரட்ட காங்கிரஸ் தலைவர் மூப்பனார், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எஸ். ஆர், பால சுப்பிரமணியம் ஆகியோர் பெரியார் மாவட்டம் செங்கம்பள்ளிக்கு மாலை 5-50 மணிக்கு வந்தனர். ஊர் எல்லையில் அவர்களுக்கு தாரை தப்பட்டை முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பில் ஈ.வி.கே.எஸ். இளங்கோ, துரைசாமி கவுண்டர், பாலசுப்பிரமணியம், சேகர், ராஜேந்திரன், கொற்கை சின்னசாமி, கிருஷ்ணன், கோதண்டபாணி, வேணுகோபால், ராஜேந்திரன், பழனிவேல், விடிால் சேகர் சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

#### திறந்த ஜீப்பில்!

அங்கு வரவேற்பை முடித்துக்கொண்டு மூப்பனாரும், எஸ், ஆர். பாலசுப்பிரமணியமும் திறந்த ஜீப்பில், வேட்பாளர் காந்தியை ஆதரித்து பிரசாரம் செய்ய புறப்பட்டனர், இவர்களுடன் மாவட்ட காங்கிரஸ் தலைவர் பாலசுப்பிரமணியம், வேட்பாளர் காந்தி, முன்னாள் எம்.எல்.ஏ. இளங்கோவன் ஆகியோரும் வந்தனர்-

சந்திப்பு!

கள்ளியம்புதூர் பிரிவு அருகே மூப்பனார் வரும்போது, எதிரே மறுமலர்ச்சி தி மு க பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி திறந்த ஜீப்பில் பிரசாரம் செய்து கொண்டே வந்தார்.

கட்டித்தழுவினர்!

திடீரென சந்தித்துக்கொண்டே இருவரும் தங்கள் ஜிப்பை விட்டு கீழே இறங்கினர். புன்முறுவல் பூத்தவாறு இருவரும் கட்டித் தழுவிக்கொண்டனர்.

மூப்பனார், தனது கட்சி வேட்பாளர் காந்தியை வை, கோபால் சாமிக்கு அறிமுகம் செய்துவைத்தார். அவரை வை. கோ. வாழ்த்தினார் அதேபோல வை கோபால்சாமியும் தனது கட்சி வேட்பாளர் வி.எம் கந்தசாமியை அறிமுகம் செய்து வைத்தார்- அவரை மூப்பனார் வசழ்த்தினார்-

'தினகரன்'

★ ★ ★

## பச்சையப்பர் கல்லூரி 150-ம் ஆண்டு விழா.

6-5-1994 அன்று மாலை 5 மணியளவில் பச்சையப்பர் கல்லூரி 150ம ஆண்டு விழா. சென்னை பச்சையப்பர் கல்லூரி திடலில் சிறப்பாக கொண்டாகிப்பட்டது.

திரு. வை. பழனிசாமி, தலைவர் பச்சையப்பன் அறக்கட்டளை வரவேற்புரையாற்றினார். பச்சையப்பன் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆ. பு. கமலாகரரார்வ் கல்லூரி அறிக்கையை வாசித்தார்- மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தைய்யா விழாவிற்கு தலைமை வகித்தார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசுரியர் திரு. கே. பொன்னுசாமி டாக்டர். வை. சிட்டிபாபு, ஆகியோர் வாழ்த்துரைத்தனர். இறுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர். டாக்டர். ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். டாக்டர். சி. பழனிவேலு நன்றி கூறினார்.

7-5-94 அன்று முன்னாள் மாணவர் தினவிழாவில் கவியரங்கம், பட்டிமண்டபம் ஆகியவை நடைபெற்றன- மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர். நாவலர் சிறப்புரையாற்றினார்.

J.L
M2112, N92 KN
N94.36.

# திருமணம்

காரைக்குடி அண்ணா தமிழ்தகழகம் செயலர் திரு. அ. கதிர் வேல் திருமதி சானகி அவர்களது திருநிறைச்செல்வன் சம்பந்தம் பி.எஸ். சி. டி. பார்ம், திருப்புத்தூர் சித. தியாகராசன் அவர்களது மகள் திருவளர்ச்நசல்வி தமிழ்ச்செல்வி இவர்களது திருமணம் 22-5-94 ஞாயிறு காலை 10-30 மணியளவில் காரைக்குடி பெரியார் சிலை அருகில் உள்ள மீனாம்பிகை திருமண மண்டபத்தில் நடைபெற்றது, திருமுறை முழக்கம் சிவத்திரு. புலவர் வி. சிவக்கொழுந்து அவர்கள் டாக்டர், தமிழ்த் திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், திரு. என். பி. வி. இராமசாமி உடையார், மற்றும் காரைக்குடி வாழ் ஆன்றோர்கள். சான்றோர்கள், வணிகப் பெருமக்கள் பலரும் வாழ்த்துரைத்தனர். உடல் நிலை காரணமாக டாக்டர். சி. எஸ். ஏ. பரிமளம் திருமணத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

★ ★ ★

# செவ்வாயுலகில் ★ ★ புரட்சிக் கவிஞர்

விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தியவண்ணம் உள்ளனர், சந்திர மண்டலம், செவ்வாயுலகம் ஆகியவற்றினைப்பற்றி, அங்கெல்லாம், சென்று, காட்சிகளைக் காணமுடியுமா ? உயிரினங்களுக்கேற்ற உறை விடமாகுமா அவை, என்றெல்லகம் ஆராம்ச்சி நடக்கிறது.

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் செவ்வாயுலகு சென்று வந்தார் — கற்பனை மூலம் !

செவ்வாயுலகம் சென்று. என்ன கண்டதாகக் கூறினார் — புராணப் பண்டிதர்கள் இந்திரலோகம் பற்றிக் கூறுவதுபோலக் கதைகளாக கூறினார் ? இல்லை ! அந்தக்கற்பனைப் பயணத்தைக் கட்டுரைவடிவில் தீட்டி. அதன் மூலமும், நாட்டு மக்களுக்கு நல்லறிவச்சுடர் கொளுத்தினார்.

5—1—31-ல்,, புதுவை முரசு எனும் கிழமை இதழில், கவிஞர் தீட்டிய செவ்வாயுலக யாத்திரை எனும் கட்டுரையில், அவர், கற்பனைத் திறத்தையும் அத்திறத்தினை அவர், பயன்படுத்தும் ஆற்றலினையும் காணலாம், அந்தக் கட்டுரை, இது.

217220.

நாங்கள் ஆறு நண்பர்களும் திட்டம் போட்டபடி எங்கள் ஆகாய விமானத்தைச் செவ்வாய் உலகத்தை நோக்கி முடுக்கினோம். அது பறந்து போய்க் குறித்த இடத்தை அடைந்தது.

மனிதர்கள் சிகப்பு நிறமுடையவர்கள்; நம்மினும் சிறிது உயர முடையவர்கள் இந்த இரண்டு அம்சங்கள் தவிரச்—செவ்வாய் உலகத் தவர் எல்லா விஷயத்திலும் நம்மையொத்தவர்களே. ஆனால் அம் மனிதர்கள் அனைவரும் எப்போதும் தங்கள் தலையின்மேல் ஒரு பெரிய கல்லைச் சுமந்தபடி இருந்தார்கள்.

எங்கள் விமானம் செவ்வாயுலகத்தில் ஒரு கிராமத்தின் வயற் புரத்தில் இறங்கிற்று, நாங்கள் முதலில் பார்த்த ஓர் உழவன் தன் தலையில் ஒரு கல்லைச் சுமப்து கொண்டு நடந்தான். ஏதோ தூக்கிக் கொண்டு போகிறான் என்று நினைத்தோம். சிறிது தூரம் நடந்தோம் உழுது கொண்டிருந்த சுமார் பத்துப்பேர்களும் தலையில் கற்சுமை யுடையவர்களாயிருந்தார்கள். அதையும் தாண்டினோம் ஓரிடத்தில் ஒருவிழா நடந்தது. மனிதர்களின் பெருங்கூட்டம் சிறு குழந்தைகள் முதல் கிழவர் ஈறாக உள்ள அனைவரும் கல்லைச் சுமந்து கொண்டி ருந்தார்கள் நாங்கள் சிரித்தால் அது குற்றமாக முடியுமோ என்று எங்கள் உள்ளம் நினைத்ததுண்டு எனினும் அடக்க முடியாத சிரிப்பும் நாங்களும் கட்டிப்புரண்டோம். எங்களில் ஒருவர் சாதாரண விஷயத் திற்கே அதிகமாய்ச் சிரிப்பவர் கலசுமக்கும் மனிதர் கூட்டத்தைப் பார்த்ததும் அவர் விழுந்து விழுந்து சிரித்தார் செவ்வாயுலகப் பெண் ணொருத்தி ஒரு கையில் தன் ஆண்குழந்தையைப் பிடித்தபடி மற் றொரு கையில் தலையில் பாராங்கல்லைப் பிடித்தபடி நடந்தாள் குழந்தையின் தலையில் ஒரு கருங்கல் இருந்தது விழாவிற் கலந்துக் கொள்ள அவள் விரைவாய் நடந்தாள் குழந்தையின் தலைச்சுமை கீழே வீழ்ந்தது அதைத்தூக்கி அவசரமாய்ப் பிள்ளையின் தலையில் வைத்தாள் அவசரமாய் நடந்தாள் எங்களில் அதிகமாய் சிரிக்கும் நண்பர் இந்தக்கல்லை எங்கே எடுத்துப் போகிறீர்கள் என்று கேட்டார் அவளுக்கு எங்கள் பாஷை தெரியவில்லை எங்களை மாத்திரம் அவள் கவனித்தாள் உடனே வீதியின் இருபக்கத்திலும் வரிசையாய் வைக்கப் பட்டிருந்த கற்களில் ஒன்றைத் தூக்கி வந்து எங்களில் ஒருவர் தலையில் வைத்தார் பிறகு மற்றொரு கல்லை மற்றொரு நண்பர் தலையில்! தடுத்தால் உதை விழக்கூடுமென்று நாங்கள் பெரிய பெரிய கற்களைத் தலைகளில் சுமந்து கொண்டோம். எங்கள் தலையில் கல்லைச் சுமத்திய பெண் — அதனோடு சென்றுவிடவில்லை நாங்கள் கறுப்பு நிறமாய் இருப்பதை அவள் உற்றுக்கவனித்தாள் ஓடினாள் தன் இனத்தாரோடு சொன்னாள் எங்களுக்கோ பயம்! செவ்வாய் உலகம் சிறுது நேரத்தில் எங்கள் பக்கம் திரும்பிற்று அவர்கள் எல்லோரும் நாங்கள் கறுப்பு நிறமாயிருப்பதையும் குட்டை வடிவமாய் இருப்பதையும் கவனிக்க ஆரம்பித்தார்கள்

தொடர்ச்சி அடுத்த இதழில்

நன்கொடை ரூ. 3-00 பதிவு எண்: G6/TN/MS(C)1239

காஞ்சி

Phone : 825 49 78

# RAK
# ADVERTISING SERVICES

**In the Panel of Agencies approved by the Government of Tamil Nadu**

No. 84, Peters Road,
2nd Floor, Royapettah,
Madras-600 014.




பெறுநர் :
திரு. / திருமதி
Director
Tamil Nadu Archives
Madras – 8

விடுநர் :
பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7. அவின்யு சாலை,
சென்னை-600 034.
பேசி: 8278570